வயதானவர்,என்பதற்கான வயது என்ன? நீங்கள் ஒரு குழந்தையாய் இருந்தால்,21 என்பது அதிக வயதாகவும், 30 என்பது மிகவும் முதிர்ந்த வயதாகவும் தெரியும். இன்றைக்கு உலகத்தில் இருக்கும் முதியவர்கள் 120 வயதிற்கும் கீழானவர்களே. ஆபிரகாமின் மனைவியாகிய சாராளோ,127 வருடங்கள் வாழ்ந்த பின்னரே மரித்தாள். ஆபிரகாம் ஒரு நிலத்தையும் அதிலுள்ள குகையையும் விலைக்கு வாங்கி அதிலே சாராளை நல்லடக்கம் செய்தான்.

ஈசாக்கு தன் தாயின் மரணத்தின் நிமித்தம் விசனமடைந்து அநேக நாட்களாய் துக்கித்து கொண்டிருந்தான். ஆபிரகாம்,40 வயதான தன் மகனாகிய ஈசாக்கிற்கு ஏற்ற துணையை, மனைவியாக தெரிந்தெடுக்க முடிவு செய்தான். ஏனெனில் அவன் மூலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா வெளிப்படுவார் என விசுவாசித்தான்.

இந்த நிலையில், ஈசாக்கு தான் வசித்த இடத்திலுள்ள கானானிய பெண்களில் ஒருத்தியை திருமணம் செய்து கொள்வானோ என்று ஆபிரகாம் பயந்ததினால் தன் வீட்டிலுள்ளவர்களில் வயதில் மூத்தவனும் தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் அதிகாரியுமாகிய தன் ஊழியக்காரனை, தன் சொந்த ஊரிலே தன் ஜனத்தின் மத்தியிலே பெண் கொள்ளும்படி அனுப்ப தீர்மானித்தான். தன் சொந்த இனத்திலிருந்து பெண்ணை கொண்டு வருவேன் என்று ஆணையிட்டு கொடுக்க கேட்டுக் கொண்டான்.

மேலும் "என்னை என் தகப்பனுடைய வீட்டிலிருந்து இந்த இடத்திற்கு அழைத்து வந்த தேவன், நீ அங்கேயிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணை கொண்டு வரும்படிக்கு தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார். அவர் உனக்கு வழியை ஆயத்தப்படுத்தி உன்னை நடத்துவார்" என்று கூறி அவனை ஆசிர்வதித்து அனுப்பினான். அந்த வேலைக்காரன் தன் எஜமானுடைய பத்து ஒட்டகங்களையும், சகலவித உசிதமான பொருள்களையும் ஈசாக்கின் வருங்கால மனைவியின் குடும்பத்திற்கு கொடுக்க எடுத்து சென்றான்.

அநேக நாட்கள் பிரயாணம் செய்தபின், அவன் மெசபடோமியா பட்டணத்தில் வசிக்கும் ஆபிரகாமின் இனத்தாரை சேர்ந்தான். ஊருக்கு புறம்பே ஒரு தண்ணீர் துரவண்டையிலே நின்று, "என் எஜமானாகிய

ஆபிரகாமிற்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்கு காரியம் சித்திக்கப்பண்ணி,என் எஜமானாகிய ஆபிரகாமிற்கு தயவு செய்தருளும்" என ஜெபித்தான். பின்பு அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதின்படி "இங்கு தண்ணீர் எனக்கு மட்டும் அல்ல, என் ஒட்டகங்களுக்கும் குடிக்கும்படி வார்க்கும் பெண் எவளோ, அவளே நீர் ஈசாக்குக்கு நியமித்தவள் என்பதை அதினாலே அறிந்து கண்டுபிடிக்க எனக்கு உதவி செய்தருளும்" என்று ஜெபித்தான்.

அவன் இந்த ஜெபத்தை செய்து முடிப்பதற்கு முன்பாகவே, ரெபெக்காள் என்னும் பெயர் கொண்ட இளம்பெண் துரவண்டையிலே வந்தாள். அவள் மிகவும் அழகுள்ளவளாய் இருந்தாள். அவள் தன் குடத்தை நிரப்பிக் கொண்டு திரும்பி செல்ல ஆயத்தமானாள். அப்போது அவன் அவளை நிறுத்தி "உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தா" என்று கேட்டான்.

அதற்கு அவள், "குடியும் என் ஆண்டவனே" என்றாள். மேலும் "உம்முடைய ஒட்டகங்களும் குடித்து தீரும்மட்டும் அவைகளுக்கு தண்ணீர் வார்ப்பேன்'' என்றாள். அவனது இருதயம் மகிழ்ச்சியினால் துள்ளியது. அவள் தண்ணீர் வார்த்தபோது அவன் தேவனை துதித்தான். தேவன் அவனுடைய ஜெபத்திற்கு பதில் கொடுத்தார் என்பதை அறிந்து, இவள் தான் அந்த பெண் என்பதினால் அவன் பொற்காதணியையும்,இரண்டு கடகங்களையும் ரெபெக்காளிடம் கொடுத்து, "நீ யாருடைய மகள்?" என்று கேட்டான். மேலும், "நாங்கள் உன் தகப்பனுடைய வீட்டிலே இராத்தங்க இடம் உண்டா?" என்றான். பின்பு அவன், அவள் ஆபிரகாமின் சகோதரனாகிய நாகோர் என்பவரின் பேத்தி என்பதை அறிந்து கொண்டான்.

அவர்கள் வீட்டை அடைந்த போது, தான் வந்த காரியத்தை அவளுடைய குடும்பத்தினருக்கு தெரிவித்தான். அப்போது "நான் ஆபிரகாமின் வேலைக்காரன், நம்முடைய தேவன் என் எஜமானை அபரிமிதமாக ஆசிர்வதித்திருக்கிறார். என் எஜமானுடைய மனைவியாகிய சாராள் முதிர்வயதானபோது, தனக்கு உண்டான யாவையும் அவருக்கு கொடுத்திருக்கிறார். என் எஜமான் இந்த இடத்திற்கு வரும்படி ஆணையிடுவித்து, அவருடைய குமாரனுக்கு பெண்கொள்ள வேண்டும் என்றார்.

நான் துரவண்டையிலே வந்த போது, ஜெபித்து தேவனிடத்தில் ஒரு அடையாளத்தை கேட்டேன்.எனக்கு தண்ணீர் கொடுத்து என் ஒட்டகங்களுக்கும் மனப்பூர்வமாய் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். ரெபெக்காள் அதை சரியாக செய்தாள். இவள்தான், ஈசாக்கிற்கு தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட மனைவி என்று விசுவாசிக்கிறேன்'' என்றான். இந்த காரியம் கர்த்தரால் வந்தது என்று அவர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். அப்பொழுது அவர்கள் கர்த்தர் சொன்னபடியே அவள் உமது எஜமானுடைய குமாரனுக்கு மனைவியாகும்படிக்கு அவளை அழைத்துக்கொண்டுபோம் என்றனர்.

பின்பு அந்த ஊழியக்காரன் வெள்ளியுடைமைகளையும்,பொன்னுடைமைகளையும்,வஸ்திரங்களையும் எடுத்து,ரெபெக்காளுக்கு கொடுத்ததுமன்றி, அவளுடைய சகோதரனுக்கும், தாய்க்கும் சில உச்சிதங்களையும் கொடுத்தான்.

மறுநாள் காலை ரெபெக்காளின் குடும்பத்தினர்,அவள் ஆபிரகாமின் ஊழியக்காரரோடு சென்று, ஈசாக்கை திருமணம் செய்து கொள்ள ஆயத்தமாய் இருக்கிறாளா என்பதை உறுதிப்படுத்தி கொள்ள விரும்பினார்கள். இது நிச்சயிக்கப்பட்ட திருமணமாக இருந்தாலும் அவர்களுடைய வழக்கத்தின்படி ரெபெக்காள் போவதற்கு ஆயத்தமாய் இருக்கின்றாளா? இல்லையா? என்பதை அறிய அவளுக்கு வாய்ப்பு கொடுத்தார்கள். "நீ இந்த மனிதனோடே கூடப் போகிறாயா'' என்று கேட்டார்கள். அவள் "போகிறேன்'' என்று பதிலளித்தாள்.

இப்படியாக, ஆபிரகாம் தேவனை விசுவாசித்து தன் தேசத்தை விட்டு வந்தது போல ரெபெக்காளும் புறப்பட்டாள். அவளுடைய குடும்பத்தினர் ரெபெக்காளை ஆசிர்வதித்து, அவளையும் அவள் வேலைக்காரிகளையும், ஆபிரகாமின் ஊழியக்காரருடன் அனுப்பி வைத்தார்கள். அவள் தான் திருமணம் செய்ய சம்மதித்த மனிதனை சந்திக்க நூற்றுக்கணக்கான மைல் பிரயாணம் செய்ய வேண்டியதாய் இருந்தது.

ஈசாக்கு ஒருநாள் சாயங்கால வேளையில் தியானம் பண்ண வெளியிலே போனபோது, ஒட்டகங்கள் வரக்கண்டான். அவன் அந்த சிறிய வண்டியை வரவேற்க தீர்மானித்து, வெளியே சென்றான். ஈசாக்கு

அவர்கள் வழியே வருகிறதை ரெபெக்காள் கண்டாள். அவள், ஆபிரகாமின் ஊழியக்காரனிடம் “நமக்கு எதிராக நடந்து வருகிற அந்த அழகான மனிதர் யார்?” என்றாள். “அவர்தான் என் எஜமானுடைய மகன் ஈசாக்கு” என்று அவன் பதிலளித்தான்.

உடனே அவள் முக்காடிட்டுக் கொண்டாள். ஆபிரகாமின் ஊழியக்காரன், ஈசாக்கிடம்,தேவன் தனக்கு செய்தவற்றையெல்லாம் சொல்லி ரெபெக்காளை அவனிடம் ஒப்படைத்தான். ஈசாக்கு அவளை தனக்கு மனைவியாக்கிக்கொண்டு, அவளை நேசித்தான். இப்படி ஈசாக்கு தன் தாய்க்காக கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான்.

ஆபிரகாம் கேத்தூராள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீயையும் விவாகம்பண்ணியிருந்தான். அவள் அவனுக்கு மற்ற குமாரரையும் பெற்றாள். ஆபிரகாம் தான் மரிக்கும் முன்பு மற்ற குமாரருக்கு நன்கொடைகளை கொடுத்தான். ஆனால் ஈசாக்கிற்கோ தனக்கு உண்டான யாவையும் கொடுத்தான். ஆபிரகாம் தன் நூற்று எழுபத்தைந்தாம் வயதில் மரித்தபோது ஈசாக்கும், இஸ்மவேலும், அவனை எப்பெரோனின் நிலத்திலே சாராளுக்காக வாங்கின குகையிலே, அவளின் அருகில் அவனை அடக்கம் பண்ணினார்கள்.

ரெபெக்காள் இருபது ஆண்டுகளாக குழந்தையில்லாமல் இருந்தாள். ஈசாக்கு ஜெபித்தபோது, ரெபெக்காளின் கருவிலே இரட்டை குழந்தைகள் உருவாயின. தேவன் ரெபெக்காளிடம், அந்த குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே, “இரண்டு வித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும், அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள் மூத்தவன் இளையவனை சேவிப்பான” என்றார்.

பிள்ளைகள் பிறந்தபோது, மூத்தவன் சிவந்த நிறமுள்ளவனும், ரோமம் நிறைந்தவனாகவும் வெளிப்பட்டான். அவனுக்கு மிகுந்த ரோமமுள்ளவன் என்று அர்த்தம் கொள்ளும்படி ஏசா என்று பேரிட்டார்கள். இளையவன் தன் சகோதரனின் குதிகாலை பிடித்துக்கொண்டு வெளிப்பட்டான். அவனுக்கு குதிகாலை பிடித்தவன் அல்லது ஏமாற்றுபவன் என்ற அர்த்தம் கொள்ளும்படி யாக்கோபு என்று பெயரிட்டார்கள்.

இந்த பிள்ளைகள் பெரியவர்களான போது ஏசா வேட்டையில் வல்லவனும், வனசஞ்சாரியுமாய் இருந்தான். யாக்கோபு குணசாலியும்

கூடாரவாசியுமாய் இருந்தான். ஏசா வேட்டையாடி கொண்டு வருகிறது. ஈசாக்கினுடைய வாய்க்கு ருசிகரமாயிருந்ததினால் அவன் ஏசாவின் மேல் பட்சமாயிருந்தான். ரெபெக்காளோ யாக்கோபின் மேல் பட்சமாயிருந்தாள்.

ஒருநாள் ஏசா வெளியிலிருந்து களைத்து வந்தபோது, யாக்கோபு சிவப்பு கூழ் சமைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஏசா யாக்கோபை நோக்கி, "அந்த சிவப்பான கூழிலே நான் சாப்பிட கொஞ்சம் தா இளைத்திருக்கிறேன்" என்றான். அப்பொழுது யாக்கோபு, "உன் சேஷ்ட புத்திரபாகத்தை இன்று எனக்கு விற்றுப்போடு'' என்றான். அதற்கு ஏசா "இதோ நான் சாகப்போகிறேனே. இந்த சேஷ்ட புத்திபாகம் எனக்கு என்னத்திற்கு'' என்றான்.

யாக்கோபோ "இந்த உணவிற்கு பதிலாக உன் சேஷ்ட புத்திரபாகத்தை எனக்கு ஆணையிட்டு கொடு'' என்றான். அவனும் அப்படியே செய்தான். பின்னர் யாக்கோபு அப்பத்தையும், பயற்றங்கூழையும் கொடுத்தான். அவன் புசித்து குடித்து எழுந்து சென்றான். இப்படி ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை அலட்சியம் பண்ணினான்.

இந்த பாடம் மிகவும் முக்கியமானது. எனென்றால் ஒரே குடும்பத்தை சேர்ந்த மக்கள்,தேவனுடைய வாக்குதத்தத்தை எப்படி வித்தியாசப்படுத்துகிறார்கள் என்பதை கற்றுக் கொடுக்கிறது. விசுவாசத்தினால் ஆபிரகாம், தன் ஊழியக்காரனை ஈசாக்கிற்கு பெண் பார்க்க அனுப்புகிறான். ஆபிரகாமின் ஊழியக்காரனும், ரெபெக்காளும் தேவனுடைய வழி நடத்துதலை விசுவாசித்தார்கள்.

ஈசாக்கு, ஏசா மற்றும் யாக்கோபை பற்றி தேவன் கொடுத்த வாக்குதத்தத்தை அறிந்திருந்தான். இந்த இரட்டை பிள்ளைகளும் தேவனுடைய திட்டத்தை அறிந்திருந்தாலும் தங்கள் சுய திறமைகளையே நம்பினார்கள். யாக்கோபு, பிற்காலத்தில்தான் தேவனை உண்மையாக விசுவாசித்தான். ஆபிரகாம் விசுவாசித்தது போல், யாரெல்லாம் தேவனை விசுவாசிக்கிறார்களோ அவர்களுக்கு அவர் கொடுத்த வாக்குத்தத்தங்கள் நிறைவேறும் என்று நாம் பார்க்கிறோம்.

இந்த பாடத்தினை பற்றிய முக்கிமான உண்மை என்னவென்றால், தேவன் தம்முடைய வாக்குதத்தங்களை பெற்றுக்கொண்டு அதை ஏற்று கொள்ளுகிறவர்களுக்கு தம்முடைய திட்டத்தை வெளிப்படுத்துகிறார். இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

1.ஏன் ஆபிரகாம் தன் ஊழியக்காரனை தனது இனத்தாரிடத்திற்கு அனுப்பினான்? a)(6 வினாடிகள் நிற்கவும்)

'ஈசாக்கிற்கு மனைவியை கண்டுபிடிக்க, ஏனென்றால் அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரன் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்

2.ஊழியக்காரன் எந்த பெண்ணை ஈசாக்கிற்கு மனைவியாக கொண்டு வர வேண்டும் என்பதை எப்படி தெரிந்து கொண்டான்? a) (6 வினாடிகள் நிற்கவும்)

எனக்கு தண்ணீர் கொடுப்பதும் அல்லாமல் என் பத்து ஒட்டகங்களுக்கும் தண்ணீர் குடிக்க கொடுக்கிற பெண்ணே சரியானவள் என்பதை நான் தெரிந்து கொள்வேன் என்று ஊழியக்காரன் ஜெபித்தான் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. ரெபெக்காளின் வயிற்றிலிருந்த இரட்டை பிள்ளைகளை குறித்து தேவன் கூறியது என்ன? a) (6 வினாடிகள் நிற்கவும்)

"இரண்டு வித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும் அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப் பார்க்கிலும் பலத்திருப்பார்கள். மூத்தவன் இளையவனை சேவிப்பான்" என கூறினார் என்று சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடந்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை

உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்த பாடத்தை பற்றி தெரியாத ஒரு நண்பருக்கு இதை கற்றுக் கொடுக்கவும். பிறகு பின்வரும் இந்த கேள்வியை பற்றி தியானிக்கவும். ஆபிரகாம் மற்றும் யாக்கோபு இருவருமே தங்கள் தாய்க்கு முதல் மகன்களாய் இல்லாதிருந்தும் தேவன் அவர்களையே கிறிஸ்து வரக்கூடிய சிறப்பான சந்ததியாக அழைத்தார்.

தேவன் உண்மையாகவே மக்களிடம் எந்த குணாதிசியங்களை எதிர்பார்க்கிறார்? யாரெல்லாம் தன் மீது விசுவாசம் வைக்கிறார்களோ அவர்களையே தேவன் நோக்கி பார்க்கிறார்.

பாடம் முடிந்தது